முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு**

இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 791**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**28.11.2021**, ஞாயிற்றுக்கிழமை

1. ஞான ஒளிகொண்ட அரங்கனே
ஞான வேலிகொண்ட தேசிகனே
தானதர்ம பலம் கொண்ட அரங்கனே
தர்மனாய் வாழுகின்ற தவராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(பிலவ வருடம் கார்த்திகை மாதம் 12ம் நாள், 28.11.2021 ஞாயிற்றுக்கிழமை)
வரங்கள் தந்து யானே உன்னை
வையகத்தில் வள்ளலாக வழிநடத்த
3. நடத்துகின்ற உன் சன்மார்க்கத்தை உலகோர்
நம்பிக்கைகொண்டு ஞானமார்க்கமாக ஏற்றுவந்தால்
இடர்கள் என்கின்ற பேரிடர் அனைத்தும்
இந்த உலகத்தை விட்டு அகன்றோடி இனிதே
4. இனிதே பாதுகாப்பும் சர்வ பலமும்
இணையில்லாத இறைசக்தி துணையும் கூடி
கனிவுபட உலகோர்க்கு அழியாமை என்கின்ற
கந்தவேலன் என் சக்தி கருணைபட உரியதாகும்
5. ஆகவே அரங்கனை தொடருகின்ற மக்களுக்கு
அற்புதத்தை ஆறுமுகன் யான் நடத்துவேன்
வரங்கள் கூட்டி அவர்களுக்கு வாழுங்காலமே
வள்ளலாக ஞானியாக வாழும் வாய்ப்புத் தருவேன்
6. தருகவே அரங்கன் சன்மார்க்கத்தை
தருகின்ற அரங்கன் தர்மத்தை
பெருமைபட உலகோர் ஏற்று வந்தாலே போதும்
பேருலகம் பெரும் பாதுகாப்பாய் மாறும்
7. மாறுதலும் இந்த உலகை மீட்கின்ற
மகாதர்மபலமும் அரங்கனுக்கே தந்துள்ளேன்
ஆறுதல்பட அரங்கன் தர்மத்தை
அகிலத்தார் ஏற்றுசெய்தால் போதும்

8. போதுமப்பா உலகம் இடரிலிருந்து மீண்டு
புண்ணியபலமிக்க ஞானபூமியாக மாற்றம் பெறும்
மாறுதலும் கலித்துன்பங்கள் அகன்றோடி
மண்ணுலகமே ஞானலோகமாகவும் ஆற்றல்பட அரங்கன் சேவையால்மாறுதல் காணும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–